★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 25உ வியாழன் (7—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 26உ வெள்ளி (8—6—56) [இதழ் 305

## இலங்கைப் பிரதமர் இலண்டன் செல்ல இயலாதவராயுள்ளாராம்!

கொழும்பு, ஜூன் 6—

இலண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கலந்துகொள்ள இயலாதவராயிருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாகும் என்ற இலங்கை சர்க்காரின் மசோதாவை எதிர்த்துத் தமிழ்மக்கள் நடத்திவரும் கிளர்ச்சியை ஒட்டி எழுந்துள்ள நிலைகளினாலேயே, தான் லண்டன் செல்ல இயலாதிருக்கும் என்று பண்டாரநாயகா பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

# சிங்கள மொழி வெறியின் எதிரொலி

## தமிழர் மீது குண்டர்கள் தாக்குதல்

## போலீசார் துப்பாக்கிப்பிரயோகம்

### எண்ணற்றோருக்குப் படுகாயம்

*நகரில் இராணுவம் வீதிவலம் வருகிறது*

கொழும்பு, ஜூன் 6—

இலங்கையில் தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப்போல சம அந்தஸ்து வேண்டுமென உரிமை கோரும் 'குற்ற'த்திற்காக, வெறிகொண்ட சிங்களவரால் தூண்டப்பட்ட குண்டர்கள், தமிழர்தம் கடைகளைத் தாக்குதல், சூறையாடுதல் போன்ற இழி செயல்களில் ஈடுபட்டதின் விளைவாக பெட்டா என்ற இடத்தில் கொழும்பு போலீசார் மூன்றுமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். ஏழுபேர் இதனுல் காயமடைந்தனர் என்று தெரிய வருகிறது.

பெட்டா என்ற இடம் நகரில் மிக அதிகமான வியாபார நிலையங்கள் நிறைந்த இடங்களுள் ஒன்றாகும்.

கடைகளைத் தாக்குவது, கண்ணாடிக் கதவுகளை உடைப்பது, பொருள்களைச் சூறையாடுவது போன்ற இழி செயல்கள் இந்த இடத்தில் மிகத் துணிவோடு மேற்கொள்ளப்பட்டதாம், குண்டர்களால்!

ஆங்காங்கே மறைந்து நின்றுகொண்டு, இந்தத் தாக்குதலை நடத்திய குண்டர் கூட்டத்தின் மீது தான் போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகம், துப்பாக்கிப்பிரயோகம் முதலியன செய்து, தமிழர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

கொழும்பு நகர முன்னாள் மேயரான டி ருத்ரா என்பவரது காருக்கு தீ வைக்கப்பட்டதாம்.

நடைபெற்ற இந்தச் சம்பவங்களில் மொத்தம் 100 பேர் வரை காயமடைந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

நேற்று முன் இரவில் ஒரு இரயிலும், இன்று காலை ஒரு இரயிலும், இந்த வெறியர்களால கவிழ்க்கப்பட்டனவாம்.

இரவு முழுதும், தமிழர் தலைவர்கள் அனைவரின் இல்லங்களிலும் போலீஸ் பாதுகாவல் இருந்ததாம்

இன்று பகலில் பெரும்பாலான தமிழ்த் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்றும், வேலைக்குச் சென்ற தமிழர்கள் பலர் சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

போலீஸ் பாதுகாப்பு இருந்தும் கூட, தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப்போல சம அந்தஸ்து வேண்டும் என்று கோரிய டிராட்ஸ்கி கட்சித் தலைவர் ஒருவரின் இல்லம் கற்களால் தாக்கப்பட்டதாம்.

கொழும்பு நகரப் போலீஸ் நிலையங்களில் உள்ள காவல்கூடங்களை எல்லாம், வெறியர்கள் நிரப்பிவிட்டனராம். மொத்தம் எத்தனை பேர் கைதாயினர் என்ற விபரம் தெரியவில்லை.

மொத்தமாக 150 பேர் வரை காயம்பட்டிருக்கக் கூடும் என சிகிச்சை தந்த மருத்துவ மனைகளிலிருந்து தகவல் கிடைத்துள்ளது

இன்று மாலை 4 மணிக்குமேல் பத்திரிகையாளரிடம் பேசிய பண்டாரநாயகா, நிலைமை கட்டுக்கடங்கி விட்டது என்றும், இராணுவம் வரவழைக்கப்பட்டு, போலீசாருடன் சேர்ந்து நகர் முழுதும் 'ரோந்து' வரச் செய்யப்பட்டிருப்பதாயும், சில விரும்பத்தகாத தீய சக்திகள் நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த இழிசெயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருப்பதாயும், பலாத்காரம் எந்த திக்கிலிருந்து வந்தாலும் அதை அனுமதிக்க முடியாது என்றும் பத்திரிகையாளரிடம் கூறியிருப்பதாகத் தெரிய வருகிறது.

---

பகிரங்க 'மார்க்கெட்' விற்பனைக்கு சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் டன் சர்க்கரையை வெளியிட இந்தியப் பேரரசினர் முடிவு செய்துள்ளனராம்

## பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி

### பதவியிலிருந்து விலகுவார்?

கராச்சி, ஜூன் 6—

முகம்மது அலி பாகிஸ்தான் பிரதமர் பதவியிலிருந்து உடல் நலக் குறைவின் காரணமாக விலகிக் கொள்வார் என்று தெரியவருகிறது.

இப்போது நிதி மந்திரியாகவிருக்கும் சையத் அம்ஜத் அலி பிரதமராக வரக்கூடும் என்றும், குடியரசுக் கட்சி சீக்கிரமே சையத் அம்ஜத் அலியை பிரதமராகத் தேர்ந்தெடுக்கும் என்றும் தெரிய வருகிறது.

## நேருவின் திட்டம் நிராகரிப்பு

## வெளியார் குறுக்கீட்டுக்கு இடமில்லையாம்!

### இராணுவ நடவடிக்கை மூலம் அல்ஜீரியப் பிரச்சினையில் தீர்வு காண முடிவு?

பாரிஸ், ஜூன் 6—

அல்ஜீரியாவில் நடைபெறும் குழப்பத்திற்குத் தீர்வு காண்பதற்காக, இந்தியப் பிரதமர் நேரு சிபாரிசு செய்திருந்த ஐந்து அம்சத் திட்டத்தை பிரெஞ்சுப் பிரதமர் நிராகரித்துள்ளார்.

'அல்ஜீரியப் பிரச்சினையில், வெளியாரின் குறுக்கீட்டுக்கு இடமில்லை' என்று அவர் குறிப்பிட்டாராம்.

இந்தத் தகவலுக்குப் பின்னர், அவர், இராணுவத்தின் மூலம் அல்ஜீரியாவில் அமைதியை நிலைநிறுத்தும் கொள்கைமீது 'நம்பிக்கை வாக்கு' தருமாறு அவர் தேசியச் சட்டசபையைக் கோரியபோது, அவ்வாறு தரப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

நேருவின் பிரேரபணையை, பிரெஞ்சு அயல் நாட்டு மந்திரியிடம் வி. கே. கிருஷ்ணமேனன் விளக்கினாராம்; ஆனால், அத்திட்டங்களை நடத்தி வைப்பதில் நடைமுறைத் தொல்லைகள் இருப்பதாகப் பிரெஞ்சு அயல் நாட்டமைச்சர் கூறிவிட்டாராம்.

# பண்டிதரின் எதேச்சாதிகாரத்திற்கு தேஷ்முக் தரும் பதில்

## பம்பாய் பிரச்சினையில் இராஜினமா செய்துவிட முடிவு!

புதுடில்லி, ஜூன் 6—

'பம்பாய் மராட்டியத்துடன் இணைக்கப்படமாட்டாது; டில்லி ஆட்சியின்கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு இருக்கும்' என்ற பிரதமர் நேருவின் முடிவை நிதிமந்திரி தேஷ்முக் ஏற்றுக்கோள்ளப் போவதில்லை என்றும், அவர் பதவியிலிருந்து விலகிக கோள்வது உறுதி என்றும் இங்கு கூறப்படுகிறது.

பம்பாயிலிருந்து தலைநகர் திரும்பிய ஒரு மணி நேரத்திற்குள், நேருவை தேஷ்முக் சந்தித்து, இது குறித்து உரையாடினாராம்.

முன்பே இருமுறை தேஷ்முக், பம்பாய் பிரச்சினையில் இராஜிநாமாச் செய்துவிடுவதாகக் கூறியிருந்தார்; பண்டிதருக்கு இராஜிநாமாக் கடிதத்தையும் அனுப்பி வைத்தார்; ஆனால், நேருதான், பம்பாய் சிக்கலுக்கு இன்னும் முடிவு காணப்படவில்லை எனக் கூறி, அவரைப் பதவி வகிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இப்போது, மராட்டிய பிரதேசக் காங்கிரசின கட்டளைக்குக் கூடக் காத்திராமல், தம்மிச்சையாகவே, மராட்டியத்திற்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டிப்பதற்காகப் பதவியைத் துறக்க தேஷ்முக் முடிவு செய்திருக்கிறாராம்.

வரும் ஜூன் 21-ந் தேதி முதல் ஜூலை 21-ந் தேதி முடிய தேஷ் பம்பாய், பூனா, சென்னை, உதகை, குற்றாலம் முதலிய இடங்களுக்குச் சுற்றுப்பயணம் செல்கிறார்.

இந்த இடைக்காலத்திற்குள் தேஷ்முக்கிற்குப் பதிலாக வேறு ஒரு நபரைத் தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம், பிரதமருக்கு ஏற்பட்டுள்ளதாம்.

பண்டித பந்த், மொரார்ஜி தேசாய், டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோரின் பெயர்கள், இந்தப் பதவிக்கு அடிபடுகின்றனவாம்!

## காரணம் அதுதானா?

'போர் மூண்டுவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் எங்கும் இல்லாததால்தான், ரஷ்யா, தன்னுடைய இராணுவ பலத்தைக் குறைத்துக்கொண்டது' என்று, ரஷ்யப் பிரதமர் புல்கானின் கூறியுள்ளார்.

### பிரகாசா—பீகாருக்குச் சென்றுவிடுவார்?

சென்னை கவர்னராக இருக்கும் பிரகாசா அவர்கள், பீகார் மாநிலத்தில் கவர்னராக நியமிக்கப்படலாம் என்று தெரிகிறதாம்!

## மலேயாவுக்கு இந்திய டாக்டர்கள் தேவையாம்!

கோலாலம்பூர், ஜூன் 6—

மலேயாவில் டாக்டர்கள் பற்றாக்குறை மிகவும் அதிகமாக இருப்பதால் இந்திய டாக்டர்கள் 25 பேரை வரவழைக்க மலேயா அரசினர் அதிகாரிகள் இந்தியா செல்வராம். ஏற்கனவே இந்திய டாக்டர்கள் 30 பேர் மூன்றாண்டு ஒப்பந்தத்தின்மீது மலேயா வரவிருக்கின்றனர்; இது தவிர, இன்னும் 25 டாக்டர்கள் வரவழைக்கப்படுவாராம்.

## மலேயா இளவரசருக்கு சிறைத் தண்டனை!

பினாங்கு, ஜூன் 5—

சட்டவிரோதமாக போர்க் கருவிகள் வைத்திருந்த குற்றத்திற்காக மலேயா இளவரசர் தெங்கு இப்ராகிம் பின்தெங்குலூக் என்பாருக்கு 6 ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாம்.

## விசாரணைக் குழுவிற்குக் கருப்புக் கொடி!

கல்கத்தா, ஜூன் 6—

சுபாஷ் போஸ் மரண விசாரணைக்குழு இன்று மாலை விமானம் மூலம் வந்து சேர்ந்தபோது விமான நிலயத்தில் சிலர் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

## மீண்டும் சிங்மன்-ரீ வாலாட்டம்!

### வட கொரியாமீது போர் துவங்கிவிடுவாராம்

சியோல், ஜூன் 6—

ஒன்றரை ஆண்டுகட்குப் பின்னா, மீண்டும் தென் கொரியத் தலைவர் சிங்மன்-ரீ வாலாட்டத் தொடங்கியுள்ளார்.

மீண்டு வடகொரியாமீது படையெடுக்கப் போவதாக அவர் பயமுறுத்தியுள்ளார்.

'கம்யூனிஸ்டுகளுடன்கூடி வாழ்வதால், உலக சமாதனம் நிலைக்காதென்பதை தென்கொரியாவின் நேச நாடுகள் தெரிந்துகொள்ளத் தவறினால், மீண்டும் போரைப் புதுப்பித்து, வடககில் படையெடுத்துவிடுவேன்' என்று அவர் திமிரவாதம் பேசியுள்ளார்.

## ரேடியக் கதிரியக்கமாம்!

கல்கத்தா, ஜூன் 6—

கல்கத்தாவில் மே திங்கள் 21-ந் தேதி சூரிய ஒளிக்கதிரைக் காட்டிலும் 30 மடங்கு அதிகமாக ரேடியக் கதிரியக்கம் அதிகரித்திருந்ததாக அறிவிக்கப்படுகிறது. அந்நாளன்று அடுத்தடுத்து 3 முறை பெய்த பெருமழையில் இது கண்டு பிடிக்கப்பட்டதெனவும், அண்மையில் அமெரிக்கா, பிரிட்டன் நடத்திய அணு, நீர்வளிக்குண்டு பரிசோதனைகளின் விளைவாக இது இருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

## 'வேலையினின்றும் எங்களை விலக்கிவிடுங்கள்'

### மருத்துவமனை சிப்பந்திகள் மீது நோயாளிகள் தாக்குதல்

கல்கத்தா, ஜூன் 6—

இங்கிருந்து 40 மைல் தொலைவிலுள்ள காஞ்சரபாராவிலுள்ள க்ஷய ரோக மருத்துவமனைச் சிப்பந்திகள, தங்களின் உயிருக்கே உலை வைக்கும் பயமுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதால், தங்களை வேலையினின்றும் விலக்கிவிடும்படி மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்திருக்கின்றனராம்.

சுமார் 875 பேர் சிகிச்சைபெறும் அம்மருத்துவ மனையில், பால் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தைக் கண்டித்துப் பல பிணியாளர்கள் பகல் உணவு உட்கொள்ள மறுத்துவிட்டனரென்றும், மருத்துவமனை 'சூப்பிரண்டெண்ட் கேட்டுக்கொண்டபோது அவரையும், ஒரு 'நர்ஸ்' உட்பட வேறு சிப்பந்திகளையும் மரக்கம்புகளாலும், கோப்பைகளாலும் பிணியாளர்கள் தாக்கிவிட்டனரென்றும் தெரியவருகிறது.

இதுபோன்ற ஒழுங்கீனச் செயல் நீடிக்குமேயானுல் மருத்துவமனையை விரைவில் மூட நேரிடும் என அதிகாரிகள் எச்சரித்திருக்கின்றனராம்.

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—6—'56 வியாழன்

# வெற்றியின் இரகசியம்!

'சிறுபான்மையினரிடம் நேர்மையாக நடந்துகொள்வோம்' என்று கூறிவிட்டு, 'கொடுமைக் குணாளர்' என்ற தமிழர் தந்த பட்டப் பெயரோடு இலங்கைத் தீவில் கொட்டமடித்துக் கொண்டிருந்த கொத்தலாவலை வகித்த பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டவர் பண்டாரநாயகா!

"சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவோம்; தமிழ் மொழிக்கு அந்த 'அந்தஸ்து' கிடைக்காமற் செய்வோம்" என்று தேர்தல் காலத்தில் உறுதிமொழி வழங்கியவர்களில், கொத்தலாவலை கட்சியை தோற்கச் செய்து, பண்டாரநாயகா கட்சியை வெற்றிபெறச் செய்தனர், இலங்கை மக்கள்!

சிங்கள வாக்காளர்கள், பண்டாரநாயகாவைத் தேர்ந்தெடுத்ததுபற்றி எழுதும்போது '....இவற்றிற்கு அப்பால் வேறு ஏதேனும் காரணங்கள் இருந்தாக வேண்டும், மிகக் குறுகிய எதிர்காலம் இதனைத் தெளிவாக்கத்தான் போகிறது', என்று நாம், கடந்த எப்ரல் திங்கள் மத்தியில் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

பண்டாரநாயகா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான காரணங்களுள் தலையாய ஒன்றினைத் தெளிவாக்கிக் காட்டும் சூழ்நிலைகள் உருவாகியுள்ளன, இலங்கையில்!

இலங்கை ஒரு சிறு தீவு; அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கையோ சுமார் 80 இலட்சம்தான். இதில் சுமார் மூன்றில் இரு பங்கினர் சிங்களவர்; மற்றொரு பங்கினர் தமிழர்.

மூன்றில் இரு பங்கினராக—பெரும்பான்மையினராக உள்ள சிங்களவர், ஒரு பங்கினராக—சிறுபான்மையினராக உள்ள தமிழர்தம உரிமைகளைப் பறிக்க எண்ணுகின்ற நிலை படிப்படியாக வளர்ந்து, உச்சம் பெற்று வருகிறது.

'இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்படும்' என்ற தேர்தல் கால உறுதி மொழியை நிறைவேற்றும் வகையில், பண்டாரநாயகா, அதற்கான மசோதா ஒன்றினை மக்கள் சபையில் கொண்டுவந்திருக்கிறார்.

"இந்த மசோதா, தமிழர் தம உரிமையைப் பறிப்பதாகும். சிங்கள மக்களின் எண்ணிக்கையில் ஏறத் தாழ சரிபாதியளவு உள்ள தமிழர்கள், தங்களின் மொழியும், ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று கோருவது, நியாயத்தின்பாற்பட்டது; இந்த நியாயத்தைப் புறக்கணித்துவிட்டு, 'சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்குவோம்' என்பது, சிறுபான்மையினரான தமிழருக்கு இழைக்கப்படும் அநீதியாகும்," என்று கூறி, அமைதியான அறப்போரில் தமிழர் ஈடுபட்டுள்ளனர்.

'தமிழ் மொழிக்கு சிங்களத்தைப் போல சமநிலை கிடைக்காமற்போனால், தமிழர்கள், முழுச் சுதந்திரத்துடன் கூடிய ஒரு தனி அரசை நிறுவிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை' என்ற கருத்து, தமிழர் தலைவர்கள் அனைவரின் உள்ளத்தையும் வேகமாக ஒன்றுபடுத்தி வருகிறது.

'தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்க வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்துவதற்காக நேற்று முன் தினம், கொழும்பு நகரில், மக்கள் சபை முன்பு அமைதியான முறையில் அறப்போரில் ஈடுபட்ட தமிழ்த் தொண்டர்கள்—தலைவர்கள்—மக்கள் சபை உறுப்பினர்கள் மீது, சிங்கள வெறியர்கள் பாய்ந்து கடுமையான தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

சிறுபான்மையினராக, அதே போது நிரந்தரக் குடிமக்களாக உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களின் உரிமைக்காகப் போராடும்போது, சிங்களவர் வெறி கொண்டு தாக்குதல் நடத்துவது, அவர்களுடைய ஆதிக்க மனப் போக்கை—'பெரும்பான்மையினரான சிங்களவர் மட்டுமே இலங்கையில் மக்களாக வாழ வேண்டும்; இதரர்கள், உரிமைகளை இழந்து அடிமைகளாக மாளவேண்டும்'—என்ற குறுகிய நோக்கத்தைத்தான் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

உலகில் பல்வேறு நாடுகளிலும் எழுந்த சிறுபான்மையினர் பிரச்சினைகளைக் கூர்ந்து நோக்குவோருக்கு, இலங்கைத் தமிழர் தம் அச்சம் நியாயமானது என்பதும், அவர்கள், 'தங்கள் மொழியும் ஆட்சி மொழியாக வேண்டும்—அரசியல் சட்டத்தின் மூலம் அது உறுதி செய்யப்படுதல் வேண்டும்' என்று விரும்புவது, இயற்கையானது என்பதை உணர முடியும்.

சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு, மொழி விவகாரத்தில் இழைக்கப்படும் இந்த அநீதியைவிட வேறுஎன்ன பெரும் அநீதி, பெரும்பான்மையினரான சிங்களவரால் இழைக்கப்பட முடியும்?

'தமிழருக்கு எதிராக சிங்கள மக்களிடை உணர்ச்சிகளைக் கிளப்பி விடுவதில், கொத்தலாவலையைவிட பண்டாரநாயகா தீவிரவாதியாக இருந்திருக்க வேண்டும்; அதனால்தான் சிங்களவர், பண்டாரநாயகாவிற்கு அமோக ஆதரவை நல்கியிருக்க வேண்டும' என்பதைத்தான், சிங்கள வெறியர்களின் போக்கு எடுத்துக் காட்டுகிறது'—என்று கூறினால், அது மிகையாகாது.

இதனை, 'முற்போக்காளர்' என்று கூறப்படும் பண்டாரநாயகாவின் மொழிக் கொள்கையும், அது பற்றி அவர் மக்கள் சபையில் தந்திருக்கும் விளக்கமும், ஓரளவு உறுதி செய்யத்தான் செய்கின்றன.

பண்டாரநாயகா வெற்றி பெற்றதின் காரணங்களுள் தலையாய ஒன்று, இப்போது தெளிவாகிறதா?

---

1954-55-ம் ஆண்டில், மொத்தம் சுமார் ரூ 14 60 000 பெறுமானமுள்ள பிளாஸ்டிக் சாமான்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

## முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்

என்னென்ன தெரியுமா?

1951-லிருந்து 1956-ம் ஆண்டு வரையில் உள்ள ஐந்து ஆண்டுக் காலத்தில் தேசிய வருமானம் சுமார் 18 சதவிகிதமும், உணவுத் தானிய உற்பத்தி 20 சதவிகிதமும் பருத்தி உற்பத்தியும், பிரதான எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியும் முறையே 45 சதவிகிதமும், 8 சதவிகிதமும் உயர்ந்துள்ளதாம்!

பெரிய பாசனத் திட்டங்களின் மூலம் புதிதாக மொத்தம் சுமார் 60 இலட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கப்பட்டிருக்கிறதாம்!

சிறிய பாசனத் திட்டங்களின் மூலம், வேறு 100 இலட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளதாம்!

தொழில் துறை உற்பத்திக் குறியீட்டெண்ணும் படிப்படியாக உயர்ந்து, 1950-ம் ஆண்டில் 105 ஆகவும், 1951-ல் 117 ஆகவும் இருந்ததாம்.

சிமெண்டு உற்பத்தி, 1950-51-ம் ஆண்டில் 27 இலட்சம் டன்னாக இருந்தது, 1955-56-ம் ஆண்டில் 43 இலட்சம் டன்னாக உயர்ந்துவிட்டதாம்!

புதிதாக மூன்று உருக்குத் தொழிற்சாலைகளையும், கனரக மின்சார உற்பத்திச் சாதனத்தையும் அமைப்பது விஷயமாக, பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டனவாம்; இரண்டாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பெரும் வேலைகளுக்கு அடிப்படைகள் உருவாக்கப்பட்டு விட்டதாம்!

## குற்றங்களைத் தடுப்பதற்கு தீவிர முயற்சி!

சென்னை, ஜுன் 5—

பருத்திச் சூதாட்டத்தையும் கள்ளச் சாராயம் காய்ச்சுவது போன்ற மதுவிலக்குச் சட்டக் குற்றங்களையும் ஒழித்துக் கட்ட தீவிர நடவடிக்கை எடுப்பது குறித்து உயர்தர போலீஸ் அதிகாரிகள் விவாதித்தனர்.

போலீஸ் இலாகா எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளின் விவரம் தெரிவிக்கப்படவில்லை என்றும், குற்றம் புரிவோர் முன்னெச்சரிக்கையாகி விடுவர் என்றும் கூறப்படுகிறது.

மதுவிலக்குச் சட்டத்தையும் சூதாட்டத் தடுப்புச் சட்டத்தையும் திருத்துவது பற்றியும் அரசினர் யோசிப்பதாகத் தெரிகிறது.

## புழுங்கலரிசி விற்பனை

சென்னை, ஜுன் 5—

சென்னையில் உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ், அரசாங்க கையிருப்பிலிருந்து புழுங்கல் அரிசி விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் புழுங்கல் அரிசியையே விரும்புவதால் டி யூ சி எஸ். கிளைகளின் மூலம் புழுங்கலரிசியை விற்பனை செய்ய 'சிவில் சப்ளை' அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர். இது இன்னும் சின்னாட்களுக்குள்ளாகவே அமுலுக்குவந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பச்சரிசி மட்டுமே பட்டணம் படி ஒன்றுக்கு $11\frac{1}{2}$ அணா வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

# தேடித் தேடிக் கொட்டும் தேளைக் கொல்லாமல் தேன் குடத்தைத் தேடி அலைவது எப்படி?

# 'மல்லிகை பறிக்கும்போது மழை பெய்தால் அதைத் துடைக்க வேண்டாமா?'

## பொதுத்தேர்தலில் கழகம் ஈடுபடுவது குறித்து அண்ணா

"நாம் எடுத்துக் கொண்டிருக்கிற இலட்சியம் இரண்டு வகையானது; அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒன்று, திராவிட நாட்டை திராவிடர்க்கு ஆக்குவது—நமது மூலாதார இலட்சியம். அசைக்க முடியாத நம்பிக்கையால், நம்முடைய உள்ளத்தோடு கலந்துபோய் விட்டிருக்கும் ஆழ்ந்த இலட்சியம் அது. அந்தக் குறிக்கோள் வெற்றி பெறுவதற்கு நமக்கோர் வேலைத் திட்டம் இருக்கிறது. அந்த வேலைத் திட்டம் தான், நம்முடைய மக்களை தாங்கள் யார் என்பதை உணரச் செய்தும், தங்களுடைய நாடு எது என்பதை அறிந்துகொள்ளச் செய்தும், தம்முடைய இனத்தார் எப்படிப் பெருமையுடன் வாழ்ந்தனர் என்பதைத் தெரிந்து கொள்ளச்செய்தும், இன்றைய இழிநிலை எப்படி இருக்கிறது என்பதை விளக்கிக் காட்டியும், எதிர்காலத்தைச் சித்தரித்துக் காட்டியும் மக்களை எழுச்சி மயமாக்குவது! அந்த வேலை தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது; அது நடந்து கொண்டே இருக்கும்; அதில் தங்கு இல்லை—தடை இல்லை; மங்கப்போவது ஏதும் இல்லை! ஆனால், நம்மை ஆளுவதற்கு ஒரு கட்சியின் சர்க்கார் இருக்கிறது. அந்த ஆளுகின்ற கட்சியினால் வருகிற அவதிகளையும் துடைக்க வேண்டும்."

என்று, அண்ணா அவர்கள், 'ஓட்' முறைபற்றி மாநில மாநாட்டில் விளக்கம் தந்து, பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"எடுத்துக்காட்டுக்கு ஒன்று கூறுவேன். தோட்டத்திற்குச் சென்று மல்லிகை பறிக்கிறோம்; நம்முடைய நோக்கம், 'மல்லிகை பறிக்கவேண்டும்' என்பதுதான். மல்லிகை பறிப்பதற்கு தோட்டத்திற்கு நாம் செல்லுகிற நேரத்தில் மழை பெய்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; மழை பெய்து தலை நனைகிறது என்றால், மேல் வேட்டியின் ஒருபுறத்தால் தலையையும் துடைத்துக்கொள்ள வேண்டும்; மறுகரத்தால் மல்லிகையையும் பறிக்க வேண்டும் 'நாம் வந்தது மல்லிகை பறிக்கத்தானே! மழை பெய்தால் என்ன?' என்றோ, அல்லது, 'மழை பெய்கிறதே! எப்படி மல்லிகை பறிப்பது?' என்றோ இருந்தால் பலன் இல்லை.

"அதைப்போலத்தான், நம்முடைய நோக்கம் திராவிட நாட்டைத் திராவிடருக்காக்குவது. அந்த இலட்சிய ஈடேற்றத்திற்காக நாம் பாடுபடுகிற நேரத்தில், நம்முடைய தலையில் மட்டுமின்றி நம் உள்ளம் வரை நனையத்தக்க அளவுக்கு நம் மீது அடக்குமுறைமழை பொழியப்படுகின்றது; அதைச் செய்கிற ஆட்சியாளர்கள் துடைக்கப்பட வேண்டாமா?

'பெய்கிற மழையையும் துடைத்துக்கொண்டு, மல்லிகையையும் பறிப்பது என்பது எப்படி எடுத்துக் காட்டுக்குப் பொருந்துமோ, அதைபோலத்தான் நாம் எடுத்துக்கொண்டிருக்கிற இலட்சியங்கள் இரண்டு ஆகும்.

"ஒன்று—நாட்டை, நாட்டுக்கு உரியவர்களுக்காக்குவது; மற்றொன்று—அந்த நாட்டை நமக்காக்கவேண்டுமென்பதற்காகப் பணியாற்றுகிற நேரத்தில் தடைகளை விதிக்கிற ஒரு சர்க்காரை—நம்முடைய பண்பாடுகளை அழிக்கிற ஒரு சர்க்காரை—நம்மைத் தாறுமாறுகப் பேசி, அடக்குமுறைகளை ஏவி, 'அழித்து ஒழித்து விடலாம்' என்று கனவு காண்கின்ற ஒரு சர்க்காரை—நம்முடைய புத்தகங்களைப் பறிமுதல் செய்கிற ஒரு சர்க்காரை—நம்முடைய பத்திரிகைகளுக்கு 'ஜாமீன்' கேட்கிற ஒரு சர்க்காரை—நம்முடைய தோழர்களை சிறைச்சாலையில் தள்ளுகிற ஒரு சர்க்காரை—நம்முடைய கூட்டங்களுக்கு 144 போடுகின்ற ஒரு சர்க்காரை—நம்மை மாற்றானிடத்தில் காட்டிக்கொடுக்கிற ஒரு சர்க்காரை எத்தனை நாளைக்கு விட்டுவைப்பது? எத்தனை நாளைக்கு அவர்களை அங்கே வீற்றிருக்க அனுமதிப்பது? 'அவர்கள் அங்கே இருக்கட்டும்; நாம் வெளியே இருந்துகொண்டு திராவிட நாட்டிற்குப் பணியாற்றிக்கொண்டிருப்போம்' என்று எப்படி எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பது?

"'தேடித் தேடி தேள் கொட்டுமாம்; தேன் குடத்தை ஒருவன் தேடிக் கொண்டே இருப்பானும்,' என்றால், எப்படிப் பொருந்தும்? தேன் குடம் தேவைதான்; ஆனால் தேள் கொட்டும்போது, கொட்டுகின்ற தேளையும் ஒழித்தாக வேண்டுமல்லவா?

"தேன் குடம் இருக்கின்ற இடம் நமக்குத் தெரிந்துவிட்டது! நாம் இருக்கும் நாடு—இது நமது என்பது அறிந்தோம்! இது நம்முடையது என்பதை நானிலம் முழுதும் அறியும்படியாகச் செய்திருக்கிறோம்!

"தேன் குடத்தைத் தேடிப் போய்க்கொண்டிருக்கும் நேரத்தில் தேள் கொட்டிக் கொண்டிருக்கிறது! தேளை அப்படியே கொட்டிக் கொண்டிருக்க விட்டுவிட்டு, 'தேன் குடத்தை மட்டும் தேடிக்கொண்டிருக்கிறேன்' என்று கூறுவதில் பயன் உண்டா?

(4-ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தினால் முடியாதது!

பம்பாய், ஜுன் 5—

"பசு வதையை சட்டத்தின் மூலம் தடை செய்ய அரசினர் தீர்மானிக்கவில்லை. இது, சட்டத்தின் மூலம் தடை செய்யும் செயலல்ல; மக்களின் மனதை மாற்றுவதின் மூலமே இதைச் சாதிக்க வேண்டும்," என்று, மத்திய சர்க்கார் உணவு - விவசாய அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் கூறியுள்ளார்.

## தீப்பெட்டித் தொழில்

இந்தியாவில் தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலில் சுமார் 24,500 பேர் வேலை பார்த்து வருகின்றனர். இவர்களில் 16,000 பேர் குடிசைத் தொழில் அடிப்படையில் நடைபெறுவரும் பிரிவிலும், பாக்கியுள்ளோர் இயந்திர ரீதியில் நடைபெற்றுவரும் பிரிவிலும் வேலைபார்த்து வருகின்றனர்.

# பத்திரிகை அச்சடிக்கும் இயந்திரங்கள்

## உற்பத்திக்கான தொழிற்சாலை நிறுவ டில்லி யோசனை

### அலகாபாத்தில் நிறுவ வேண்டுமென கோரிக்கை?

அலகாபாத், ஜுன் 5—

இரண்டாம் திட்டகாலத்தில் பத்திரிகை அச்சடிக்கும் பெரும் 'ரோட்டரி' இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

'அதுபோல ஒரு தொழிற்சாலை துவக்குவது இலாபகரமானதாயிருக்குமா?' என்று, அச்சு இயந்திரத் தொழில் நிபுணர்களைச் சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

இதற்குள்ளாகவே, அந்தத் தொழிற்சாலை அலகாபாத்தில் அமைய வேண்டும் என்றும், இந்தியாவில் உள்ள பெரும் அளவு பத்திரிகை அச்சடிக்கும் தொழில் நடைபெறும் நகரங்களுள் அலகாபாத் ஒன்று என்றும், அலகாபாத் பத்திரிகையாளர் கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

'அமிர்தபஜார்' பத்திரிகையைச் சேர்ந்த ஒரு அச்சு இயந்திர நிபுணரை ஆலோசகராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாயும், அந்தக் குழு, பத்திரிகை அச்சடிக்கும் இயந்திர உற்பத்திக்கான தொழிற்சாலை நிறுவுவது பற்றி திட்டம் ஒன்று தயாரித்து இந்திய சர்க்காருக்கு அனுப்புமென்றும் தெரியவருகிறது.

## தெ. ஆ. இந்தியர் நிலை என்ன?

### இந்தியாவின் கடிதம்

ஐ நா. (நியூயார்க்), ஜுன் 5—

ஐ நா. சபையின் 10-வது கூட்டம் முடிந்து பல திங்களாகியும் தென் ஆப்பிரிக்கா எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாததால், 'தென் ஆப்பிக்கா இந்தியர் நிலை குறித்து தென் ஆப்பிரிக்க அரசினருடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா தயாராயிருக்கிறது' என்று சின்னாட்களுக்கு முன்னர் தென் ஆப்பிரிக்காவுக்கு இந்தியா கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது. தென் ஆப்பிரிக்க அரசியலாரின் பதிலை இந்தியா எதிர்பார்க்கிறதாம்!

## 28,902 மாணவர்கள்

### பள்ளி இறுதி வகுப்பில் தேர்வு

சென்னை, ஜுன் 5—

கடந்த 1956 மார்ச் திங்களில், பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்களில் 48 சதவிகிதத்தினரே தேர்வு பெற்றிருக்கிறார்கள்!

மொத்தமாக 64,211 பேர்கள் பரீட்சை எழுதுவர் என்று பதிவு செய்யப்பட்டிருந்தது; ஆனால் சில பாடங்களுக்கு மட்டுமே பரீட்சை எழுதிய தனிப்பட்ட மாணவர்கள் உட்பட 63,171 பேர்களே பரீட்சை எழுதினர்.

தேர்வில் கலந்துகொண்ட 63,171 பேர்களில் 28,902 பேர்கள் மட்டுமே பரீட்சையில் தேறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

மாஸ்கோ, பீகிங்' பிரேக் ஆகிய இடங்களில் இந்திய தூதுவராலயங்களின் ஒரு பகுதியாக வர்த்தகத் தகவல் காரியாலயங்களைத் திறந்து வைக்க இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

---

## 'நம் நாடு'

நான்காம் ஆண்டு
துவக்க விழா மலர்

★

விற்பனையாளர்கள் தங்கள் தேவையை 10—6—56-க்குள் தெரிவித்துவிடக் கோருகிறோம்.

---

## பெங்களூர் மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்

10—6—56 பிற்பகல் 4-மணியளவில், பிளாக்பள்ளி தி. மு. கழகக் கட்டிடத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுபோது அண்ணா அவர்களின் பெங்களூர் மாவட்ட சுற்றுப் பிரயாணத்தைப் பற்றியும், மாநில மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறையில் கொண்டுவர நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் ஆராய வேண்டியிருப்பதால், எல்லாக் கிளைக்கழக செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள் அறிவிக்கிறார்.

---

# 'நம் நாடு'

## நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று
நாடெங்கும் கிடைக்கும்

விலை அணா 2.

★

அண்ணா, மற்றும், கழக எழுத்தாளர்
பலரும் எழுதுகின்றனர்.

---

# கழகச் செய்திகள்

### திருவெண்காடு தி. மு. க.

30—5—56 இரவு 7 மணியளவில், மேலவீதி துரைக்கண்ணு தையல் நிலையத்தில், தோழர் டி. வி. சம்பத் தலைமையில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது கழகக் கூட்ட வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், ஜுன் இறுதிக்குள் மாநில மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து விளக்கந்தர, கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

### புதுவை தி. மு. கழகம்

3—6—56 இரவு 7 மணியளவில், கழக இடத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், கழக உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, செயற்குழுவில், குறைந்துள்ள அறுவருக்குப் பதிலாகத் தேர்தல் நடத்தப்பட்டு, தோழர்கள் அ. அமலநாதன், ப. இராசு, எஸ். முத்து, சு. நாராயணன், இரா. கந்தன். ச இலட்சுமணசாமி ஆகியோர் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

## தேயிலைத் தொழில்

### விரைவில் சுதேசி தொழிலாகுமாம்!

இந்தியாவின் தேயிலைத்தொழில் வெகு விரைவிலேயே உண்மையான 'சுதேசி'த் தொழில் ஆகிவிடுமென்றும், நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இதில் நல உரிமை இருக்குமென்றும் இந்திய வர்த்தக தொழில் இலாகா அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்துள்ளார்.

"தேயிலைத் தொழில் தற்போது மிக மோசமான நிலையிலிருக்கிறது. தேயிலைத் தோட்டங்களிலுள்ள தொழிலாளருக்கோ அல்லது நிர்வாகிகளுக்கோ தொழிலின் உண்மையான வளர்ச்சியில் அக்கறை இல்லை. தொழிலாளர்களுக்கு கூலியின் மேலும், நிர்வாகிகளுக்கு இலாபத்தின் மேலும்தான் அக்கறை இருக்கிறது; இந்நிலை ஒழிய வேண்டும். தேயிலைத் தொழில் சுதேசித் தொழிலானால்தான் இதை நிரந்தர அடிப்படையில் அமைக்க முடியும்," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய சர்க்கார், பல்வேறு மாநில சர்க்கார்களுக்குக் கடன்களாக 1956 மார்ச்சு மாதம்வரை மொத்தம் ரூ. 21,53,00,000 வழங்கியுள்ளனர்.

### பிரான்மலையில் தி. மு. க. துவக்க விழா

#### அண்ணா மன்ற ஆண்டு விழாவில் தோழர்கள் இலட்சிய விளக்கம்

28—5—56-ல், பிரான்மலை, அறிஞர் அண்ணா மன்ற மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும், தி. மு. கழகத் துவக்க விழாவும் காந்தி மைதானத்தில், தோழர் முத்துமணி இயக்கப்பாடலுடன் ஆரம்பமாகியது. தோழர் சே. சி. சாமி தலைமை தாங்கினார். தோழர் ஞா. தியாகஅரசு ஆண்டு அறிக்கை வாசித்தார். பின்னர், தோழர்கள் மு. கருணாநிதி, மதுரை என். முத்து, தென்னரசு ஆகியோர், பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் பங்கு கொள்வது பற்றி விளக்கினர்.

தோழர் எஸ். முத்து அவர்களால், ஊரின் பல பகுதிகளில் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

ஊரின் பல பகுதிகளும் வளைவு தட்டிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பொதுக்கூட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் பெரும் அளவில் சைக்கிள்கள் கலந்துகொண்டன.

### பெங்களூர் இலக்குமணபுரி தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம்

3—6—56 காலை 10 மணிக்கு, கிளைக் கழகப் பணிமனையில், தோழர் எஸ். வி. பதி தலைமையில், மேற்படி கூட்டம் நடைபெற்றது. மாவட்டப் பிரதிநிதிகள் தோழர்கள் எஸ். ஜே. உசேன், ஏ. டி. பிரான்சிஸ் ஆகியோர், விசேட அழைப்பின் மீது கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

கோலார் தங்கவயல் ஆண்டர்சன்பேட்டை கிளைக் கழகச் செயலாளர் தோழர் கே. ஜி. சின்னராசன் இயற்கை எய்தியமைக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; செயலாளர் ஜி. எஸ். அண்ணியப்பன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் ஆர். முனுசாமி அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### தாராபுரம் தி. மு. கழகம்

3—6—56 மாலை 7-30 மணி அளவில், நல்லநாயக்கன்பேட்டைத் தெருவிலுள்ள திரு. மௌன குருசாமி அவர்களின் கட்டிடத்தில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் எம். சுப்பிரமணியம், கே. பி. சந்திரனே, கன்குஞ்சு ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும் தோழர்கள் துரைசாமி, கன்னியப்பன், புத்தன், பழனிச்சாமி, மருதமுத்து, பெரியசாமி, சுப்பையன், அருள்மணி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் திருமதி எம். ஆர். சந்தானலட்சுமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### பெங்களூர்—சீராமபுரம் தி. மு. கழகம்

8—6—56 காலை 9 மணியளவில், கழகப் பணிமனையில், தோழர் வ. இலக்குமணன் தலைமையில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் சு. கண்ணன், பி. சேரன், என். தங்கவேலு, வி. இராமலிங்கம், எம். எம். கந்தகோபால், வி. சுப்பிரமணி ஆகியோர், தி. மு. க. 2-வது மாநில மாநாட்டின் சிறப்பு அமைப்புகளைப் பற்றியும், நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கிப் பேசினர்.

---

# கிராமத் தலையாரியாக இருந்த பெண் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்

### மகள், கொள்ளையருடன் தொடர்புகொண்டிருந்தாராம்!

மாங்கீர், ஜுன் 5—

இந்தியாவிலேயே முதல் முதலாக பெண் என்ற முறையில் கிராமத் தலையாரியாக (சௌகிதார்) 13 ஆண்டுகளுக்கு முன் நியமிக்கப்பட்டிருந்த சனிசாரி என்ற பெண்மணி இப்போது கிராமத் தலையாரி பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாராம்.

ஒரு வழக்கமான குற்றவாளியாயிருந்தும் அந்தப் பெண்மணி, கோசி நதியில் மூழ்கிக்கொண்டிருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றியதற்காக, ஒரு பரிசாக இந்த பதவி தரப்பட்டாராம்!

சனிசாரிக்கு, பான் அலியா என்ற ஒரு பெண் இருப்பதாகவும், குதிரை ஏற்றத்தில் திறமை பெற்ற இந்தப் பெண் அருகில் உள்ள காடுகளில் வசிக்கும் கொள்ளைக் கூட்டத்தினருக்கு உணவு கூறுபவராக இருப்பதாகவும், எனவே இந்தப் பெண்ணின் தாயான சனிசாரி தன் கடமைகளைச் சரிவரச் செய்ய இயலவில்லை என்றும், போலீசார் குற்றம் சாட்டினர்கள்.

மாங்கீர் வட்ட நிர்வாக அதிகாரி இந்த குற்றச்சாட்டுகளை விசாரித்துவிட்டு, கிராமத் தலையாரிப் பதவியிலிருந்து சனிசாரி விலகிக்கொள்ள வேண்டும் என்றும், தாயும் மகளும் இரண்டு ஆண்டுகளுக்கு நன்னடத்தை ஜாமீன் தரவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

## மத்திய பாரத் மாநிலம் முழுதும்!

### ஆதாரக் கல்விப் பயிற்சியாம்!

இந்தூர், ஜுன் 5—

ஆதாரக் கல்வி முறையை மத்திய பாரத் மாநிலம் பூராவும் அமுலுக்குக் கொண்டுவர அரசியலார் தீர்மானித்துவிட்டதாக மத்திய பாரத கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

சோசலிச சமுதாய அமைப்பே நமது சர்க்காரின் இலட்சியமென்றும், இன்றைய நிலையிலுள்ள கல்வி முறையை இதற்குப் பொருத்தமான வகையில் மாற்றுவது அவசியமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறாராம்.

---

சென்றவாரம் மேற்கு வங்காள கடற்கரை பிரதேசத்தில் வீசிய புயலின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக, பிரதமர் நேரு நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம் அளித்திருக்கிறார்.

# '1959ம் ஆண்டில் வேலை துவங்கும்'

## 'நெய்வேலியில் பரிசோதனைகள் வெற்றிமுகம்'

### திட்டம்பற்றி மத்திய உதவி மந்திரி

சிதம்பரம், ஜுன் 4—

நெய்வேலியில் நடைபெற்று வரும் பரிசோதனைகள், இதுவரை கிடைத்துள்ள முடிவுகளின்படி நம்பிக்கையூட்டுவனவாக இருப்பதாகவும், 1959 இறுதிக்குள் நிலக்கரி தோண்டும் வேலை நிச்சயம் துவங்கும் என தான் நம்புவதாகவும் மத்திய உற்பத்தி இலாகா துணை மந்திரி சதீஷ் சந்திரா இங்கு கூறியிருக்கிறார்.

நேற்று இங்கு வந்த அந்த மந்திரி நெய்வேலியைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்.

இந்த நெய்வேலி திட்டத்திற்காக, மத்திய சர்க்கார் இரண்டாம் திட்டத்தின்கீழ், ரூ. 70 கோடி வரை செலவிட உத்தேசித்துள்ளதாகவும், 2,11,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய தெர்மல் ஸ்டேஷன் ஒன்றும், உர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றும் துவக்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாயும் தகவல் தந்திருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சுரங்கப் பயிற்சிக்கான வகுப்புகள் நிறுவுவதுபற்றிக் கேட்கப்பட்டபோது, 'நெய்வேலிக்குத் தேவையான சுரங்க அதிகாரிகள் பற்றி திட்டக் குழுவிற்கு சர்க்கார் தெரிவித்துள்ளனர்; திட்டக் குழு பல்கலைக் கழகக் குழுவுடன் கூடிப் பேசி, இந்தக் கல்வி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கிடைக்கச் செய்ய ஏற்பாடாக வேண்டும்' என்றும், இப்படி ஒரு திட்டத்தைத் தான் வரவேற்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

# அண்ணா இலட்சிய விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"எனவேதான், இந்தத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென்று நானும் விரும்பினேன்; மக்களும் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

"'அதில் ஈடுபடுவதற்கு உங்களுக்குப் பண வசதி ஏது?'—கேட்கின்ற தோழர்கள் இருக்கின்றார்கள்!

"இந்த மாநில மாநாட்டைக் கூட்டுவதற்குப் பண வசதி யார் தந்தார்கள்? எங்கிருந்து கிடைத்தது? இங்கே பந்தலில் நிற்கிற ஒவ்வொரு காலும், ஆறு ரூபாய் இருக்கும்; மேலே மூடப்பட்டிருக்கும் வெள்ளைத் துணி மட்டும் ஆயிரம் ரூபாய் இருக்கும்; எங்கிருந்து பெற்றோம், தோழர்களே, எங்கிருந்து பெற்றோம்?

"அவரவர்கள்கொடுத்த தொகை குறைவு; ஆனால், அந்தத் தொகைகள் மொத்தமாகச் சேர்ந்தபோது இந்த எழில் உள்ள பந்தலைக் காண முடிந்தது! அப்படித்தான் தேர்தலுக்கும் வசூல் ஆகும்!

"புற்றுக்கு அருகே நின்று மகுடி ஊதும் பாம்புப் பிடாரன் கூட, புற்றுக்கு உள்ளே பாம்பு இருப்பது தெரியாமல்தான் ஊதுகிறான்.

"அவன், ஊதுகிற 'மோகனம்' சரியாக இருந்தால்தான், பாம்பு தானாக மேலேவரும்; அதைப் போலத்தான், நீங்கள் செல்ல வேண்டிய இடத்தில் சென்று, எடுத்துக் கூறவேண்டிய முறைப்படி கூறி, ஏசுநாதர் கூறியதைப்போல், 'தட்டு — திறக்கப்படும்! கேள் கொடுக்கப்படும்!'

"அவர் மட்டும்தானா அப்படிப் பெறமுடியும்? அவர் அருளாளர்! அருள் விஷயத்தில் அப்படிப் பெறக்கூடும்! நாம் எல்லாம் அரசியல்வாதிகள்; 'கேள்கொடுக்கப்படும்! தட்டு—திறக்கப்படும்!' இத்தனைக்கும், அந்தக் கோட்டைகள் ஒன்றும் 'இரட்டைத் தாழ்ப்பாள்' போட்டவை அல்ல! தட்டாமலேயே, உள்ளே போனவர்கள் தெரியுமல்லவா, உங்களுக்கு?

"இராமசாமி படையாச்சி தட்டியா உள்ளே போனார்? இல்லை! மாணிக்கவேலர் கேட்டா உள்ளே போனார்? இல்லை! இவர்கள் இருவரும் சிறிது நேரம் வாயிற்படியில் நின்றார்கள்; உள்ளே இருப்பவர்கள், சன்னல்வழியாகப் பார்த்தார்கள்; 'யார்' என்றார்கள்; 'தெரியவில்லையா? நான்தான் மாணிக்கவேலர்,' என்றார்; 'என்ன, வெயிலிலேயே நிற்கிறீர்கள்? உள்ளே கொஞ்சம் வாருங்கள்,' என்றனர்; 'அதற்கென்ன வருகிறேன்' என்று கூறி, முதலில் மாணிக்கவேலர் போனார்!

"'ஐயோ, உள்ளேபோனாரே, உள்ளே போனாரே—என்று, இராமசாமிப் படையாச்சி சிறிது நேரம் கையைப் பிசைந்துகொண்டு நின்றார்; பின், சுற்றுமுற்றும் பார்த்தார்; பக்கத்தில் கோவிந்தசாமி மிகுந்த கண்காணிப்போடு இருப்பதைப் பார்த்து, 'நீ கொஞ்சம் விலகிப் போ,' என்று கூறிவிட்டு, இவரும் உள்ளே போய்விட்டார்; அவ்வளவு சுலபத்தில் மந்திரி பதவி கிடைக்கிறது! எனவே, பதவிக்காக அல்ல, நாம் இந்த வேலையில் ஈடுபடுவது என்பதை நீங்கள் இந்த இரண்டு பேரைப் பார்த்தால் தெரியும்.

"நாடக மேடையில்கூட மந்திரி வேஷம் போடவேண்டுமானால், பளபளப்பான உடை அணிந்துகொள்ள வேண்டும்; எரிச்சல் தருகிற பவுடர் பூசிக்கொள்ள வேண்டும்; தலையில் தாங்கமுடியாத பாரமாயிருக்கும் 'பாகை' வைத்துக்கொள்ள வேண்டும். புதிதாக 'நடை' பழகிக்கொள்ள வேண்டும். இத்தனையும் சகித்துக்கொண்டால் தான், நாடகத்தில் மந்திரி வேஷம் கிடைக்கும்!

"நாட்டை ஆளும் இரண்டு மந்திரிகள், அவ்வளவு கஷ்டம் கூடப்படவில்லை! திடீரென மந்திரிகளாக ஆகிவிட்டார்கள்! அந்த நிலை நாட்டில் இருக்கும்போது, மந்திரி பதவிக்காகவா நாம் தேர்தலில் ஈடுபடுவோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

"காங்கிரசாருக்கு நான் பொதுக் கூட்டங்களில் எடுத்துக் கூறி வந்தேன்—'நாங்கள் மந்திரிகள் தானே ஆகக்கூடாது என்கிறீர்கள்?' யார் யார் மந்திரிகள் ஆகிவிடக்கூடும் என்று உங்களுக்கு எண்ணம் இருக்கிறதோ, அவர்களை எல்லாம் குறிப்பிடுங்கள்; அவர்களை எல்லாம் அழைத்து வந்து, 'எங்களுக்கு ஆயுட்காலத்தில் மந்திரி வேலை வேண்டாம்' என்று உங்களுடைய பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுத் தரச் செய்கிறேன்; ஆனால், ஒன்று—'திராவிடநாடு விடுதலைக்காக நாங்கள் பாடுபடுவோம்' என்று நீங்கள் கூறுங்கள்; தேர்தலில் நாங்கள் ஈடுபடுவதே இல்லை', என்று நான், கூறி வந்திருக்கிறேன்; ஆனால், அதற்கு இதுவரை எந்தக் காங்கிரஸ் தலைவர் பதில் கூறியிருக்கிறார்?

"எனவே, பதவிக்காக இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறோம் என்று எவரும் கருதாமல், இது ஒரு ஜனநாயகக் கடமை என்பதை உணர வேண்டும். இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை, அப்படி உணர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

"இப்போது ஆட்சியில் இருப்பவர் காமராசர்; நீங்கள் அறிவீர்கள்; நேருவிடத்தில் காமராசர் பேசுவதை நீங்கள் மனக் கண்முன் சித்தரித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

"டில்லி பட்டணத்திற்கு காமராசர் போகிறார், நேருவைப் பார்க்க! நேருவோ, சீனாட்டுத் தூதுவரைப் பார்த்துவிட்டு, ஜப்பான் நாட்டுத் தளபதியுடன் உரையாடிவிட்டு, அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துவிட்டு, இராஜகுமாரி அமிர்தகௌரியைப் பார்த்து 'இன்று தோட்டக் கச்சேரி ஏதேனும் உண்டா?' என்று கேட்கும்போது, அவர், 'இல்லை' என்று சொன்னால், 'இல்லையா?' என்று கேட்டு, இப்படிப் பல வேலைகளுக்குப் பிறகு, இரண்டுநாள் கழித்து காமராசரைச் சந்திக்கிறார்—என்று வைத்துக்கொள்ளுங்கள்.

"காமராசரை நேரு கேட்கிறார்—'எப்படியிருக்கிறது உங்களுடைய மாகாணம்?'—'அமைதியாக இருக்கிறது' என்கிறார் காமராசர்!

'ஆச்சாரியார் காலத்திலிருந்த அமளி?'—'ஒரு துளியும் இல்லை!'

'பெரியார் இராமசாமி?'—'நமக்கு வேண்டிய நண்பர்!'

'கம்யூனிஸ்டுகள்?' — 'சாதுக்களாகி விட்டார்கள்!'

'யார்தான் உங்களுக்குஎதிர்ப்பு?' —'தி மு கழகத்தில் சில இளைஞர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் தான் எதிர்ப்பு!'

'அவர்கள் என்ன, தேர்தலுக்கு நிற்பார்களோ?' — 'தேர்தலுக்காவது அவர்கள் நிற்பதாவது? அடுத்த தேர்தலில் காங்கிரசுக்குப் போட்டியில்லை'—என்று, காமராசர் கூறுகிறார்!

"அதைக் கேட்கும் நேரு நினைக்கிறார்—'அடுத்த தேர்தலில், தென்னாட்டைப் பொறுத்து, 'நாராயணன் கோவிலுக்கு நாலு பக்கமும் வாயிற்படி' என்பதுபோல், காங்கிரசுக்குக் கதவே இருக்காது; அத்தனை பேரும் வரலாம்'—என்று!

"அந்த எண்ணத்தில் மண் விழச் செய்வதுதான் நாம் இன்று எடுத்திருக்கிற முடிவு!

"நாம் எல்லாம் மந்திரியாக வீற்றிருக்க வேண்டும்—என்ற அற்ப ஆசையினால் அல்ல!

"மந்திரி பதவிக்கு வந்து விடுவதால், எவரேனும் மகத்தானவர்களாகி விடுவார்களா? மகத்தானவர்கள் மந்திரி பதவிக்கு வந்தால், மந்திரி பதவிக்கே மகத்துவம் வரும்; அவ்வளவே தவிர, மந்திரி பதவியில் உட்காருவதினால் ஒருவர் மகத்தானவராகிவிட முடியாது.

"அவினாசிலிங்கம் செட்டியார்—என்று, ஒரு மந்திரி இருந்தார்; எங்கே அவருடைய விலாசம்?

"ஜோதி அம்மையார்—என்று, ஒரு மந்திரி இருந்தார்களே, எங்கே அவர்கள் இன்றைய தினம்?

"வாகீஸ்—என்று, ஒரு மந்திரி இருந்தார்; நினைவிலிருக்கிறதா உங்களுக்கு?

"குருபாதம்—என்று, ஒரு மந்திரி இருந்தார்; யாருக்காவது கவனம் இருக்கிறதா?

"மாதவமேனன்—என்றொரு மந்திரி இருந்தார்; யாராவது நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறார்களா?

"வெங்கிடசாமி நாயுடு—என்று ஒரு மந்திரி இருந்தார்; யார் அவரைப்பற்றி இன்று கவலைப் படுகிறார்கள்? அவர்களுக்கே கூட அது தெரியாது!

"இந்த மாதிரி, மந்திரிகளாக இருந்தவர்கள் எல்லாம் 'விலாசம்' தெரியாமல் போவதைப் பார்க்கிறோம்; நாம் மந்திரிகளாக இல்லாமலிருக்கும் சாதாரண காலத்திலேயே, எத்தனை மந்திரிகளைப் பார்த்தோம்?

"கொடிகட்டி ஆண்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இன்று சைவப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதைக் காண்கிறோம!

"கோலோச்சிக்கொண்டிருந்த குமாரசாமி ராஜா, இன்று, கவர்னர் வேலையில் ஒதுங்கிப் போனதைப் பார்க்கிறோம்!

"ஆத்திரத்தோடு அடக்குமுறைகளை வீசுவதற்குத் தன்னைத் தயாரித்துக்கொண்டிருந்த முதுகிழவர்—ஆந்திர கேசரி, இன்று அரசியலை விட்டு விலகியிருப்பதைக் காண்கிறோம!

"அரசியல் சாணக்கியம் அத்தனையும் என்னிடமல்லவா இருக்கிறது—என்று அகந்தையோடு பேசிக்கொண்டிருக்கும் ஆச்சாரியார், அரிபரந்தாமனுடைய பெருமையைப் பற்றி எழுதிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம!

இவ்வளவை எல்லாம் பார்த்த பிறகா நமக்கு மந்திரி பதவிமேல ஆசை வரும; அப்படியே வந்ததாலேதான், இருக்கவே இருக்கிறது, நம்முடைய நாடகக் கம்பெனி! நாலுக்கு நாளைக்கு வேடம் போட்டால், ஆசை தீர்ந்துவிடும்; என்ன அதிலே கெட்டுவிடும்? ஆசையினால மந்திரி பதவிக்காக அல்ல, இந்தக் காரியத்தில் ஈடுபடுவது; காங்கிரஸ் 'அடுத்த பொதுத் தேர்தலில் எங்களை எதிர்ப்பவர் யாருமில்லை' என்று சொல்லிக்கொள்ளவிடமாட்டோம்.

[அவரது பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வரும்.]

## அமெரிக்கத் தலைவர் விதிக்கும நிபந்தனை!

வாஷிங்டன், ஜுன் 6—

"அமெரிக்க தற்காப்பு அமைச்சரை மாஸ்கோவிற்கு வருமாறு ரஷ்யா அழைத்ததால்தான், ரஷ்ய தற்காப்பு அமைச்சரை வாஷிங்டனுக்கு வருகை தரும்படி நான் அழைப்பேன்" என்று அமெரிக்க குடியரசுத் தலைவர் கூறியுள்ளாராம்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா சுற்றுப் பயணம்

★

ஜுன் 14 : மாலை—இராமநாதபுரம்
இரவு—பரமக்குடி
„ 15 : மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
„ 16 : மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
„ 17 : —அருப்புக்கோட்டை

அண்ணா அவர்களுடன் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகவை. ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கோள்வர்.

## வடக்கு இரயில்வேயில் வேலை நிறுத்தம்

### தொழிலாளர்களின் 'சர்வீஸ்' துண்டிக்கப்படாது

புதுடில்லி, ஜுன் 6—

கால்கா, மற்றும் வடகிழக்கு இரயில்வேயின் சில இடங்களிலெல்லாம் நடைபெற்ற 'சட்ட விரோதமான 'வேலை நிறுத்தத்தை தொழிலாளர்களின் 'சர்வீஸ்' பாதிக்கும் வகையில் கணக்கிடுவதில்லை என, சர்க்கார் முடிவெடுத்திருக்கிறதாம்.

இது, இந்த வேலை நிறுத்தத்திற்கு மட்டும் தரப்படும் தனிச் சலுகை என்றும் சர்க்கார் அறிவித்துள்ளது. இந்தமாதிரி எதிர்காலத்தில் சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தில் எவரேனும் ஈடுபட்டால், சட்டங்கள் கடுமையாக அமுல் செய்யப்படுவதுடன், தண்டனைகளும் தவறாமல் விதிக்கப்படும் எனறும் சர்க்கார் எச்சரிகிறார்களாம்.

## சென்னை அரசியலார் உத்திரவிட்டுவிட்டனர்!

சென்னை, ஜுன் 6—

இனி புதிய 'ரிக்ஷா'க்காரர்களுக்கு வெளியூர்களில் அனுமதி கொடுக்கக்கூடாதென சென்னை அரசினர் உத்தரவிட்டிருக்கின்றனர். புதிய 'சைகிள் ாக்ஷா'க்களுக்கும், 'சைகிள் ரிக்ஷா'க்காரர்களுக்கும்கூட அனுமதி கொடுக்க வேண்டாமென அரசியலார் உத்தரவிட்டுள்ளனர்.

இவ்வுத்தரவுக்கிணங்க, தற்போது ஓடும் நிலையிலுள்ள எல்லா 'ரிக்ஷா'க்களுக்கும் அனுமதி வழங்கப்படும்; புதிய 'ரிக்ஷா'க்கள் வரமுடியாதபடி ஏற்கனவே உள்ள வண்டிகளுக்கு எண்கள் தரப்படுமாம்.

## நெல்லை, கோழிக்கோட்டில் பட்டறைகள் அமைப்பு

### சென்னை சர்க்கார் ஒப்புதல்

சென்னை, ஜுன், 7—

திருநெல்வேலியிலும், கோழிக்கோட்டிலும் தச்சுவேலை, கருமார் (கொல்லர்)வேலை ஆகியவற்றிற்கு இரண்டு பட்டறைகளை அமைக்கும் திட்டத்தை சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஒவ்வொருவருக்கும் ரூ. 30 உதவியுடன் தச்சுவேலையில் 15 பேர்களுக்கும், கருமார் வேலையில் 20 பேருக்கும் ஓராண்டிற்குப் பயிற்சியளிக்கப்படும்

## 400 பேர் குடும்ப நிர்வாகப் பயிற்சி பெறுகின்றனராம்

புதுடில்லி, ஜுன் 7—

பதினெட்டு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 400 'கிராம சேவிகை'கள், குடும்ப நிர்வாகப் பயிற்சி நிலையங்களில் இப்பொழுது பயிற்சி பெற்று வருகின்றனர்.

மாதம் ரூ. 50 உதவிச் சம்பளத்துடன் இவர்களுக்கு ஓராண்டு காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 8 கோடி டாலர்

### இந்தியா கடன் வாங்குமா?

ஐதராபாத், ஜுன் 6—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சில திட்டங்களின் செலவை நிறைவேற்ற சர்வதேச முன்னேற்ற பாங்கி இந்தியாவுக்குக் கடனளிக்கும்; மொத்தம் 8 கோடி டாலருக்கு (சுமார் ரூ. 40 கோடி) இரு கடன்கள் பெற உலக பாங்கி—இந்தியப் பேரரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது," என்று, உலக பாங்கி குழுத் தலைவர் கூறியுள்ளார்.

இதுவரை இந்தியாவுக்கு உலக பாங்கி 13 கோடி டாலர் (சுமார் ரூ 65 கோடி) கடன் கொடுத்துள்ளதென்றும், தனிப்பட்டோர் துறைக்காகவே அந்தக் கடன் தரப்பட்டுள்ளதென்றும், இந்தியப் பேரரசினர் அதற்கு உத்திரவாதம் அளிப்பதென்றும் அவர் கூறினாராம்.

உலக பாங்கியிடமிருந்து இந்தியா, டாடா இரும்பு—எஃகுத் தொழிற்சாலையின் முன்னேற்றத்துக்காக இந்திங்கள் $7\frac{1}{2}$ கோடி டாலர் கடன் வாங்கக்கூடுமாம்.

## சென்னையிலா 'இயந்திர ஏர்கள்' தயாரிப்பு?

கவன்ட்ரி (இங்கிலாந்து) ஜுன் 6—

இந்தியாவிலேயே தங்களின் இயந்திர ஏர்களை ('டிராக்டர்') தயாரிப்பதற்கு, பிரிட்டிஷ் கிறுவனமொன்று இந்திய அரசினர் கைத்தொழில்—வர்த்தக இலாகாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி முடித்துவிட்டனராம்.

சென்னையிலுள்ள 'ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி'யின் தொழிலகத்தில் இயந்திர ஏர்கள் தயாரிக்கப்படுமாம்.

## இரயில் பெட்டிகள் செய்ய மற்றோர் தொழிற்சாலை?

புதுடில்லி, ஜுன் 6—

'மீட்டர் கேஜ்' இரயில்வே பாதைகளுக்கு இரயில் பெட்டிகளைச் செய்வதற்காக மற்றொரு 'கோச்' தொழிற்சாலையை நிறுவ அரசியலார் தீர்மானித்திருக்கிறார்களாம்.

சென்னையிலுள்ள பெரம்பூர் தொழிற்சாலையில் 'பிராட் கேஜ்' பெட்டிகளே தயாரிக்கப்படுகின்றன.

## மக்களின் ஒத்துழைப்பை பொறுத்திருக்கிறதாம்!

### நெசவாளர் வாழ்க்கைதர உயர்வு பற்றி அமைச்சர்

ஷோலாப்பூர், ஜுன் 4—

"நெசவாளரிடையே நிலவும் வேலையின்மையைப் போக்குவதும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே கைத்தறித் தொழிலின் நோக்கம். இரண்டாவது திட்டம் முழுமையடைந்ததும், நெசவாளரின் ஆண்டு வருமானத்தை இரட்டிக்க அதாவது ரூ. 600-லிருந்து ரூ. 1,200 ஆக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்; ஆனால் இது மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கிறது," என்று ஒரு கைத்தறி-சிறு தொழில் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் இந்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார்.


## அரியலூரில்

'நம் நாடு' விற்பனையாளர்:

ஆ. ஆறுமுகம்
தக்காலி படையாச்சி தெரு,
அரியலூர், திருச்சி மாவட்டம்


திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.